மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ) சைதாப்பேட்டையில் ஆண்டொன்றுக்கு 7,000 டன்கள் நைட்ரிக் அமிலமும், 5,000 டன்கள் சோடியம் நைட்ரேட் அமிலமும் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றை நிறுவ மத்திய அரசு 1973-ம் ஆண்டு இசைவுக் கடிதம் ஒன்றை சென்னையில் உள்ள டாக்டர் முகுந்தா என்பவருக்கு வழங்கியுள்ளது. அவர் அத்தொழிற்சாலையை அம்பத்தூரில் நிறுவி வருகிறார்.

திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவரவர்களே, இதிலே மத்திய அரசாங்கத்தின் பங்கு, மாநில அரசாங்கத்தின் பங்கு ஏதேனும் உண்டா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அப்படி இருப்பதாகத் தெரியவில்லை.

திரு. பெ. சீனிவாசன்: தலைவரவர்களே, அந்தத் தொழிற்சாலையை நிறுவுவதற்கு பப்ளிக் செக்டாரிலிருந்து, அல்லது கூட்டுறவு செக்டாரிலிருந்து ஏதாவது முயற்சி எடுக்கப்பட்டதா? அந்த முயற்சிக்கு அரசாங்கம் என்ன பதில் தந்தது?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அப்படி எந்தத் தகவலும் என்னிடத்தில் இல்லை.

மன்னிப்பள்ளம் ஆனந்தத்தாண்டவபுரம் சாலை

*832 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயூரம் தொகுதியில் மன்னிப்பள்ளத்திலிருந்து ஆனந்தத் தாண்டவபுரம் வரை கப்பிச்சாலை அமைக்கும் பணி துவங்கப்பட்டுவிட்டதா?

(இ) ஆம் எனில், அவ்வேலை எப்போது முடிவுபெறும்?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) இச்சாலையின் ஒரு பகுதி வேலைதான் துவக்கப்பட்டுள்ளது.

(இ) மன்னிப்பள்ளம்-ஆனந்தத்தாண்டவபுரம் சாலை மேம்பாடு வெள்ளப் பாதிப்பு, நிவாரணத் திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டது. சேத்தூர்-பொன்மாசநல்லூர் சாலையின் மொத்த நீளமான 3.8 கிலோ மீட்டரில் 1.6 கிலோ மீட்டர் நீளத்திற்கு சாலை செப்பனிடப்பட்டு முடிவுறும் தறுவாயில் உள்ளது. மீதமுள்ள 2.2 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலையும் 2.8 கிலோ மீட்டர் நீளமுள்ள பொன்மாசநல்லூர் கிராம சாலையும் நிதி ஒதுக்கீடு இல்லாத காரணத்தால் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

திரு. பெ. சீனிவாசன் : திரு. செழியன் அவர்கள் எழுப்பியது பாயிண்ட் ஆப் ஆர்டரின் கீழ் வராமல் போகலாம். இந்தப் பேரவையில் ஒரு எதிர்க்கட்சி விளக்கம் கேட்பதற்கு ஏதாவது வழி வேண்டும். அதற்கு அசெம்பளி ரூல்ஸில் வழியில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எந்தவிதிமுறையின் கீழ் இதைக்கொண்டு வரவேண்டும் என்று விதிமுறையை மாற்றியபிறகு பார்க்கலாம்.

திரு. பெ. சீனிவாசன் : தற்பொழுது விதி இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதிமுறையை மாற்றுவதற்கு ஏதாவது வழி செய்யலாமா என்று பார்க்கலாம். இப்பொழுது விதிமுறையில் இடமில்லை. அப்படிப்பட்ட பிரச்னைக்கு விதிமுறையிலே ஏதாவது வழி செய்யலாமா என்று பின்னால் பார்க்கலாம்.

திரு. கோவை செழியன் : ஆன் எ பாயிண்ட் ஆப் கிளாரிபிகேஷன் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது பாயிண்ட் ஆப் கிளாரிபிகேஷனிலும் வராது.

திரு. கே. டி. கே. தங்கமணி : ஒத்திவைப்புத் தீர்மானங்களைப் பொறுத்த வரையிலே சில ஒத்திவைப்புத் தீர்மானங்கள் 10, 11-ம் தேதிகளில் கொடுக்கப் பட்டிருக்கின்றன. முக்கியமான தீர்மானம் என்று நினைத்துத்தான் அதைப் பற்றி எந்த முடிவும் எடுக்காமல் இருக்கிறீர்கள் என்று நினைக்கிறேன். பதினைந்தாம் தேதி ஆகிவிட்டதால் அதனுடைய நிலை என்ன? இம்மாதிரி ஒத்திவைப்புத் தீர்மானங்களைப் பற்றி என்ன நிலை என்று தாங்கள் சொன்னால் உதவியாக இருக்கும். ஏற்கனவே கொடுக்கப்பட்ட தீர்மானங்கள் நிராகரிக்கப் படாமல் இருப்பதால் அவை முக்கியமான தீர்மானங்கள் என்று தாங்கள் கருதியிருக்கவேண்டும் என்று நினைக்கிறேன். நான்கு தினங்கள் ஆகியும் கூட அவை என்ன நிலையில் இருக்கின்றன? ஒத்திவைப்புத் தீர்மானம் என்ன என்பதை நான் சொல்ல விரும்பவில்லை. அதுபற்றி ஏதாவது தகவல் தந்தால் உதவியாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதுபற்றி நாளைக்குப் பார்க்கலாம்.

(முற்பகல் 10-00)

திரு. முனு ஆதி : சார், பாயின்ட் ஆப் இன்பர்மேஷன்.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, நான் கூட ஒரு இன்பர்மேஷன் கேட்கவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாயின்ட் ஆப் இன்பர்மேஷனும் இல்லை; பாயின்ட் ஆப் ஆர்டரும் இல்லை.